**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21.09.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**

இளமறிவியல் மாணவர் சேர்க்கை 2026–2027

**நேரடி மாணவர் சேர்க்கை (Spot Admission)**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், தனியார் இணைப்புக் கல்லூரிகளில் மட்டும் காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்கான நேரடி மாணவர் சேர்க்கை (Spot Admission) 24.09.2026 அன்று காலை 9.00 மணியளவில் கோயமுத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக அண்ணா அரங்கத்தில் நடைபெற உள்ளது.

**நேரடி மாணவர் சேர்க்கை (Spot Admission) நடைபெறும் விதம் :**

நேரடி மாணவர் சேர்க்கையில் கலந்து கொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் கலந்தாய்விற்குரிய குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூரில் நேரிடையாக வந்து கலந்து கொள்ள வேண்டும்.

**நேரடி மாணவர் சேர்க்கையில் (Spot Admission) கலந்து கொள்ள நிபந்தனைகள்:**

- நேரடி மாணவர் சேர்க்கை (Spot Admission) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் (தனியார்) இணைப்புக் கல்லூரிகளுக்கு மட்டுமே பொருந்தும், அரசாங்க உறுப்புக் கல்லூரிகளுக்கு பொருந்தாது.
- நேரடி மாணவர் சேர்க்கையில் இடம் கிடைக்கப் பெற்ற மாணவர்களிடமிருந்து மட்டுமே கலந்தாய்வு கட்டணம் பெறப்படும் மற்றும்
- நேரடி மாணவர் சேர்க்கைக்கு நகர்வு முறை (Sliding System) கிடையாது.

**நேரடி மாணவர் சேர்க்கையில் எவரெல்லாம் கலந்து கொள்ளலாம்?**

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்து தரவரிசை பட்டியலில் இடம் பெற்று பொது கலந்தாய்வினை தவறவிட்டவர்கள்
- பொது கலந்தாய்வில் இடம் கிடைத்து சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்து கொள்ளாதவர்கள்
- தரவரிசை பட்டியலில் இடம் பெற்று பொது கலந்தாய்வில் ஏற்கனவே பங்கேற்காதவர்களும் கலந்து கொள்ளலாம்.
- துணைக்கலந்தாய்விற்கு (Supplementary Application) விண்ணப்பித்து இடம் கிடைக்காத தகுதியான விண்ணப்பதாரர்கள் மற்றும்
- தனியார் கல்லூரிகளில் நிர்வாக இடஒதுக்கீட்டின் கீழ் ஏற்கனவே சேர்க்கைப் பெற்று பயின்று வரும் மாணவர்கள் அவர்களின் மதிப்பெண் அடிப்படையிலும், சுய விருப்பத்தின் பேரிலும் கலந்து கொள்ளலாம்.

**நேரடி மாணவர் சேர்க்கையில் எவரெல்லாம் கலந்து கொள்ள கூடாது?**

- பொதுக் கலந்தாய்வில் இடம் பெற்று ஏற்கனவே சேர்க்கை பெற்றவர்கள் மற்றும்
- பொதுக் கலந்தாய்வில் இடம் பெற்று, பின்னர் இடைநிறுத்தம்(Discontinued) செய்தவர்கள்

**நேரடி மாணவர் சேர்க்கைக்குரிய கட்டணம்:**

நேரடி மாணவர் சேர்க்கையில் (Spot Admission) கலந்து கொள்ளும் மாணவர்கள், கல்லூரியை தேர்வு செய்யும் முன் கலந்தாய்வு கட்டணம் செலுத்த தேவையில்லை. கலந்தாய்வில் இடம் கிடைக்கப் பெற்ற மாணவர்கள் மட்டுமே கலந்தாய்வு கட்டணமாக SC / SCA/ ST பிரிவு மாணவர்கள் ரூபாய். 1500/- மற்றும் இதர பிரிவினர் ரூபாய். 3000/- செலுத்த வேண்டும்.

**தனியார் இணைப்புக் கல்லூரிகளுக்கான ஆண்டுக் கட்டணம்**

தனியார் இணைப்புக் கல்லூரிகளுக்கான ஆண்டுக் கட்டணம் ரூபாய்.40,000/- முதல் ரூபாய்.50,000/- வரை (உணவு மற்றும் தங்குமிடக் கட்டணம் நீங்கலாக) இருக்கும். இதர கட்டணங்கள் குறித்த விவரங்களை அந்தந்த கல்லூரிகளை தொடர்பு கொண்டு கேட்டறிந்து தெளிவு பெறவும். தனியார் இணைப்புக் கல்லூரிகளின் தொலைபேசி எண்கள் http://tnau.ucanapply.com என்ற இணையதளத்தில் உள்ள தகவல் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

**நேரடி மாணவர் சேர்க்கை நடைபெறும் நாளன்று பின்பற்ற வேண்டியவை,**

- நேரடி மாணவர் சேர்க்கையில் கலந்து கொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் சேர்க்கை நடைபெறும் வளாகத்திற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு வர வேண்டும்.

- நேரடி மாணவர் சேர்க்கையின் போது தனியாார் இணைப்புக் கல்லூரிகளுக்கான உணவு மற்றும் தங்குமிடக் கட்டணம் குறித்த

விவரங்களை, (தேவைப்படின்) மாணவர்கள் தனியார் இணைப்புக் கல்லூரி ஆசிரியர்களிடம் கேட்டு அறிந்து கொள்ள வேண்டும்.

- நேரடி மாணவர் சேர்க்கை நடைபெறும் அரங்கில், கலந்து கொண்ட மாணவர்களின் வருகைப் பதிவேடு குறிக்கப்பட்டு, தரவரிசை நிர்ணயிக்கப்படும்.
- நேரடி மாணவர் சேர்க்கையின் போது, மாணவர்களுக்கு கல்லூரி காலியிடம் திரையில் தெரிவிக்கப்படும்.
- தரவரிசையின் அடிப்படையில், மாணவர்கள் கல்லூரி மற்றும் பட்டப்படிப்பினை தேர்வு செய்ய அழைக்கப்படுவார்கள்.
- நேரடி மாணவர் சேர்க்கையின் போது மதிப்பெண் மற்றும் சாதி அடிப்படையில் கல்லூரிகளில் அனைத்து இடங்களும் நிரப்பப்பட்டவுடன், தேவை ஏற்படின் காத்திருப்பு பட்டியல் உருவாக்கப்படும்

நேரடி மாணவர் சேர்க்கையில் கலந்து கொள்ள அழைக்கப்பட்ட மாணவர்களுக்கு இடம் கிடைக்கும் என்ற உத்தரவாதம் அளிக்க இயலாது.

நேரடி மாணவர் சேர்க்கைக்கான வகுப்புவாரியான காலியிடங்களின் விவரங்கள் 23.09.2026 அன்று http://tnau.ucanapply.com என்ற இணையதளத்தில் வெளியிடப்படும். மாணவர் சேர்க்கைக்கான காலியிடங்கள் அவ்வப்போது புதுப்பிக்கப்படும்.

நேரடி மாணவர் சேர்க்கை குறித்த விவரங்களை அறிய விரும்பும் மாணவர்கள் 94886 35077, 94864 25076 என்ற அலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் அல்லது ugadmissions@tnau.ac.in என்ற மின்னஞ்சல் முகவரியை அணுகலாம்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*